புதுவை அரசு
வணிக வரித் துறை
***

# செய்திக் குறிப்பு

வணிகர்கள், தாங்கள் செய்யும் விற்பனைக்கு உரிய வரி செலுத்துவதை, வணிக வரித் துறை உறுதி செய்யும் நடவடிக்கையில், பொது மக்களும் பங்கு பெரும் பொருட்டு, ஒரு பிரத்தியோக கட்செவி அஞ்சல் **(WhatsApp)** எண் **73 95 89 89 89** மற்றும் மின்னஞ்சல் முகவரி **'complaints.ctd@gmail.com'** துவங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் மற்றும் நுகர்வோர்கள் இந்த வசதியினை பயன்படுத்தி புகார்கள் மற்றும் தகவல்களை மேற்கண்ட கட்செவி அஞ்சல் மற்றும் மின்னஞ்சலில் தெரிவிக்கலாம்.

2007ஆம் ஆண்டு புதுச்சேரி மதிப்பு கூடுதல் வரிச் சட்டம் மற்றும் விதிகளின் படி, வணிகர்கள் தாங்கள் செய்யும் அனைத்து விற்பனைக்கும், முறையான பில் / இன்வாய்ஸ் (bill / Invoice) கட்டாயம் வழங்க வேண்டும். அத்தகைய பில் / இன்வாய்ஸில், வணிகரின் பெயர் மற்றும் முகவரி, பதிவு எண் (TIN), பில் / இன்வாய்ஸின் வரிசை எண், விற்கப்படும் பொருட்களின் விவரம், அளவு, மதிப்பு, மொத்த தொகை மற்றும் பில் / இன்வாய்ஸ் வழங்கும் நபரின் கையெழுத்து ஆகியவை கண்டிப்பாக இடம் பெற வேண்டும்.

பொது மக்கள் மற்றும் நுகர்வோர்கள், கீழ் காணும் சூழ்நிலைகளில், தங்களிடம் உள்ள பில் / இன்வாய்ஸின் நகலை மேற்கூரிய கட்செவி அஞ்சல் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்:

i. வாங்கும் பொருட்களுக்கு பில் / இன்வாய்ஸ் வழங்க படவில்லை என்றால்,
ii. எஸ்டிமேட் சிலிப்பில் பில்/இன்வாய்ஸ் வழங்கப் பட்டால்,
iii. வெள்ளை பேப்பரில், வணிகரின் பெயர், முகவரி மற்றும் இதர விவரங்கள் இல்லாமல் பில் / இன்வாய்ஸ் வழங்கப் பட்டால்,
iv. பில் / இன்வாய்ஸில் வணிகரின் பதிவு எண் (TIN) இல்லை என்றால்,
v. பில் / இன்வாய்ஸில் வரிசை எண் இல்லை என்றால்.

வணிகர் மீது, இத் துறை சார்ந்த பிற புகார்கள் இருப்பின், அத்தகைய வணிகரின், பெயர், முகவரி மற்றும் புகார் குறித்த விவரங்களை சுருக்கமாக மேற்கூரிய கட்செவி அஞ்சல் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ள படுகிறார்கள்.

...2/-

மேலும், வணிகர்கள் சட்ட விரோதமாக பொருட்களை சேமித்து வைத்திருத்தல், சந்தேகத்துக்குரிய வகையில் பொருட்களை கொண்டு செல்லுதல், வரி ஏய்ப்பு செய்தல், பதிவு பெறாமல் வணிகம் செய்தல், போன்ற விவரங்களை மேற்கூரிய கட்செவி அஞ்சல் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ள படுகிறார்கள். பொது மக்கள் மற்றும் நுகர்வோர்கள் தாங்கள் வாங்கிய பில் / இன்வாய்ஸின் நகலை, உரிய வரி செலுத்தப்பட்டுள்ளதா என்ற சரிபார்த்தலுக்கு அனுப்பி வைக்கலாம்.

புகார் தாரர் மற்றும் தகவல் அளிப்பவரின் பெயர், முகவரி, கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவை ரகசியமாக வைக்கப்படும். எக்காரணம் கொண்டும், துறை சார்ந்த அலுவர்கள் உட்பட யாரிடமும் அவை வெளிபடுத்தப்படாது. எனவே, பொதுமக்கள் மற்றும் நுகர்வோர், வணிக வரித் துறையின் இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கி, வரி ஏய்ப்பினை தடுக்க உதவும்படி கோரப்படுகிறார்கள்.

**(G. ஸ்ரீநிவாஸ்)**
**ஆணையர் (வணிக வரி)**

தேதி: **07.06.2016.**